www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsi11T

**தென்காசி மாவட்டம்**

**காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024**

19-09-2024

-----

**வகுப்பு 11**

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I**

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

1) 'புல்லின் இதழ்கள்' - நூலின் ஆசிரியர்

அ) பாப்லோ நெரூடா ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே

இ) ரவி வர்மா ஈ) வால்ட் விட்மன்

2) **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க:**

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை

ஈ) இந்திரன் - பேச்சுமொழியும், கவிதை மொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ

3) பாயிரம் இல்லது .............. அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

4) மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

5) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ..............

அ) மதிப்புக் கூட்டுப்பொருள் ஆ) நேரடிப் பொருள்

i) அ-மட்டும் சரி ii) ஆ-மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) இரண்டும் தவறு

6) உலக சிட்டுக்குருவி நாள்

அ) மார்ச் - 20 ஆ) ஏப்ரல் - 12 இ) மே - 6 ஈ) ஜூன் - 10

7) **கூற்று** : 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

**விளக்கம்** : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்றும் விளக்கமும் சரி.

இ) கூற்று தவறு, விளக்கம் சரி. ஈ) கூற்றும் விளக்கமும் தவறு.

8) 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) முருகன் ஈ) அண்ணாமலையார்

9) த், ட், ற், இன் என்பன ................. காட்டும் இடை நிலைகளாகும்.

அ) இறந்தகாலம் ஆ) நிகழ்காலம் இ) எதிர்காலம் ஈ) எதிர்மறை

10) துன்பப்படுபவர் ...............

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

11) ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் .............. என்பதாகும்.

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

12) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை

இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13) தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்கள் ..............

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

14) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது ................

அ) காய்முன்நேர் ஆ) காய்முன்நிரை

இ) கனிமுன்நிரை ஈ) மாமுன்நேர்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** **3×2=6**

15) ''வளருங் காவில் முகில் தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும்''
- அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

16) மலையினும் மாணப் பெரிது எது?

17) 'ஏதிலிக் குருவிகள் எங்கோ போயின' - தொடரின் பொருள் யாது?

18) இங்கே ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×2=4**

19) பேச்சுமொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?

20) சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனார் கூற்று யாது?

21) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**

22) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) வைத்தார்

ஆ) இரங்கி

24) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

ஆ) தேர்வெழுத வேகமாகப் போங்க நேரங்கழிச்சிப் போனா பதட்டமாயிரும்.

25) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) அரும்பொருள்

ஆ) தண்டுடை

26) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:**

அ) போலீஸ்

ஆ) வருடம்

27) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

கலை, களை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



28) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**

அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

ஆ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

29) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்:**

அ) கால்நடை **(அல்லது)**

ஆ) வைகை

30) **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுக்க:**

**(கம்பு, மை, வளை)**

அ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் .............

ஆ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம்.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** **2×4=8**

31) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) 'கலைவலார் மறையவர்' கருத்தில் எண்ணியது யாது?

33) தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

34) நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:** **2×4=8**

35) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

38) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

39) அ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

- **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

40) **தமிழாக்கம் தருக:**

அ) The pen is mightier than the sword.

ஆ) A picture is worth a thousand words.

இ) Education is the most powerful weapon, which you can use to change the world.

ஈ) Tit for Tat.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்;
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

**- பாரதியார்**

42) 'தா' என்ற வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரமைத்து எழுதுக.

43) இயற்கை **(அல்லது)** விவசாயி என்ற தலைப்பில் கவிதை எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **3×6=18**

44) அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்'' - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக. **(அல்லது)**

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விளக்குக.

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும், எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரீகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46) அ) 'யானை டாக்டர்' - குறும்புதினம் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி - V

**அடிபிறழாமல் எழுதுக:** **4+2=6**

47) அ) உண்டாலம்ம ........... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) நன்று ........... என முடியும் திருக்குறள்.

----------

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com